**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 07.08.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வெண்டைக்காய் விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

இந்தியாவில் வெண்டைக்காய் முக்கிய விவசாய மண்டலங்களில் பெருமளவில் பயிரிடப்படுகிறது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் 2024–25 ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீடுகளின்படி, இப்பயிர் சுமார் 5.63 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, ஆண்டுக்கு சுமார் 76.99 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. குஜராத், மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் தேசிய அளவில் உற்பத்தியில் முன்னணியில் இருந்தாலும், தமிழ்நாடும் ஒரு முக்கிய உற்பத்தியாளராகவும் அதிக நுகர்வு கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் ஆகியவை வெண்டைக்காய் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். இப்பயிர் முக்கியமாக ஆடிப் பட்டம் (ஜூன் முதல் ஆகஸ்ட் வரை) மற்றும் தைப்பட்டம் (பிப்ரவரி) ஆகிய இரு பருவங்களில் பயிரிடப்படுகிறது.

ஆண்டு முழுவதும் உள்நாட்டில் நல்ல தேவை நிலவும் அதே வேளையில், அண்டை பிராந்தியங்கள் மற்றும் உலகளாவிய ஏற்றுமதிச் சந்தைகளுக்குத் தேவையான வெண்டைக்காயை வழங்குவதில் தமிழ்நாடு முக்கிய மையமாகத் திகழ்கிறது. அடர் பச்சை நிறம் மற்றும் பளபளப்பான தோற்றம் கொண்ட வெண்டைக்காய் வகைகளையே நுகர்வோர் அதிகம் விரும்புவதாக வர்த்தகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது, ஒட்டன்சத்திரம், கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் போன்ற உள்ளூர் உற்பத்திச் சந்தைகளிலிருந்து வரும் புதிய விளைபொருட்கள், மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய மொத்த விற்பனைச் சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகளுக்குத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையத்தின் கீழ் இயங்கும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளில் நிலவிய வெண்டைக்காய் விலைகளை ஆய்வு செய்ததுடன், வர்த்தகர்களிடம் விரிவான கருத்துக்கணிப்புகளையும் மேற்கொண்டது. பொருளாதார அளவீட்டு காலத்தொடர் பகுப்பாய்வு மற்றும் தற்போதைய சந்தை வரத்து ஆகியவற்றின்

அடிப்படையில், அறுவடை காலத்தில் தரமான வெண்டைக்காயின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.35 முதல் ரூ.37 வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகள், பயிர் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளை இதற்கேற்ப திட்டமிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.


**சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:**
உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003.

**தொழில்நுட்ப விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:**
பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003.


**மக்கள் தொடர்பு அலுவலர்**